20th November 1963]

திட்டமும் இப்போதைய நிலையில் இல்லாததால் இந்தக் கூட்டுறவு சங்கத்தை நமது மாதவரம் ப்ராஜெக்டுடன் சேர்க்க அரசாங்கம் சிந்திக்குமா ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : இது மாதவரத்தைப் பற்றித்தான். மாதவரத்தைப் பற்றித்தான் கேள்விக்கு பதில் சொல்லியிருக்கிறேன் . . . .

திரு. கே. டி. கோசல்ராம் : நான் ஐயனுவரம் சொலைடியைப் பற்றி என்று நினைத்துவிட்டேன்.

சேலம் கூட்டுறவு மத்திய பாங்க்

* 344 கேள்வி—திரு. ம. கமலநாதன் : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கிழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1962-ம் ஆண்டு மே மாதம் 7-ம் தேதியில் 44-ம் எண் கேள்விக்கு அளித்த பதிலையொட்டி சேலத்தில் இருக்கும் சேலம் மாவட்ட கூட்டுறவு மத்திய பாங்கியை இரண்டாகப் பிரிக்கும் திட்டம் இப்போது எந்த நிலையிலுள்ளது ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : இந்த திட்டத்தை சர்க்கார் தற்காலிகமாக ஒத்திப் போட்டிருக்கிருர்கள்.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : ஒத்திப் போட்ட காரணத்தை அறியலாமா ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : ஜில்லாவை இரண்டாகப் பிரித்ததற்குப் பிறகுதான் இந்த யோசனை.

Houses for Harijans

* 345 *Q.*—SRI S. MADHAVAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether there is any proposal to give up the construction of houses for Harijans and other Scheduled Communities; and

(*b*) if so, what are the alternative schemes for providing houses for them?

THE HON. SRI P. KAKKAN : (*a*) No.

(*b*) Does not arise. It may however be stated that the Director of Harijan Welfare submitted proposals for integrating the Rural Housing Scheme of the Co-operative Department with the Harijan Housing Scheme with a view to enable the Harijan to join the Housing Co-operative Societies and to build fairly durable houses at a cost of Rs. 2,500 each. It was decided to take up this question after the present National Emergency is over.

(அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை. எனினும் ஹரிஜனங்கள் வீட்டு வசதிக் கூட்டுறவுச் சங்கங்களில் சேர்ந்து வீடு ஒன்று ரூ. 2,500 செலவில் நல்ல வீடுகளைக் கட்டிக்கொள்ள வசதி செய்யும்

[20th November 1963

பொருட்டுக் கூட்டுறவுத் துறையின் கிராம வீட்டு வசதித் திட்டத்தையும் ஹரிஜன நலத்துறையின் வீட்டு வசதித் திட்டத்தையும் ஒன்ருகச் சேர்த்து நிறைவேற்றுவதற்கான திட்டங்களை ஹரிஜன நலத்துறை டைரக்டர் அனுப்பியுள்ளார். தற்போதைய தேசிய நெருக்கடி நிலை தீர்ந்த பிறகு இப்பிரச்சனையை எடுத்துக்கொள்வதென்று தீர்மானிக்கப்பட்டது.

திரு. மீ. கலியாணசுந்தரம் : 2,500 ரூபாய் வரைக்கும் கொடுக்கக் கூடிய தொகையில் எந்த அளவுக்குக் கடன், எந்த அளவுக்கு மான்யம்? ஹரிஜனங்கள் பெரும்பாலானவர்கள் 2,500 ரூபாய் கொடுக்க முடியாத காரணத்தினுல் இது கடனுகக் கொடுக்கப்படுமா அல்லது மான்யமாகக் கொடுக்கப்படுமா?

கனம் திரு. பூ. கக்கன் : ஷேர் காப்பிட்டலைப் பொறுத்த வரையில் பாதியை கடனுக அரசாங்கம் கொடுக்கும். பாதியை அவர்களே போடவேண்டும்.

தமிழாசிரியர்கள் (உயர் துவக்கப் பள்ளிகள்)

* 346 கேள்வி—திரு. முனு. ஆதி : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பஞ்சாயத்து யூனியன்களைச் சார்ந்த உயர் துவக்கப்பள்ளிகளில் கட்டாயமாக வித்துவான் அல்லது புலவர் பயிற்சி பெற்ற ஆசிரியர்களைக்கொண்டே தமிழ் போதிக்கச் செய்தல் வேண்டும் என அரசாங்கம் உத்தரவு பிறப்பித்துள்ளதா? விவரமென்ன?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எல்லா வகையான நிர்வாகங்களிலும் உள்ள உயர் துவக்கப் பள்ளிகளில் VI, VII, VIII ஸ்டாண்டர்டுகளில், மொத்தமாகப் பார்க்கும்போது நான்கு பிரிவுகள் அல்லது அதற்குமேல் இருந்தால், தமிழ்ப் பண்டிதர்களைக் கொண்டே தமிழ் கற்பிக்க வேண்டுமென அரசாங்கம் ஆணை பிறப்பித்துள்ளது.

The Government have ordered that in higher elementary schools under all kinds of managements, having four or more sections in standards VI to VIII taken together, Tamil should be taught only by a Tamil Pandit.

திரு. முனு. ஆதி : தலைவர் அவர்களே, சில உயர்தர ஆரம்பப் பள்ளிகளில் செகண்டரி கிரேட் ஆசிரியர்களையே வைத்துக் கொண்டு நடத்துகிருர்கள் என்ற புகார் வந்திருக்கிறதா? அப்படியானுல் அதன் மீது சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : முன்பு அவ்வாறு செகண்டரி கிரேட் ஆசிரியர்கள் இருந்தார்கள். ஆனுல் இப்போது நான் கூறிய விடையின்படி, 4 பிரிவுகளுக்கு மேல் இருந்தால் தமிழ்ப் பண்டிதர் வைக்கவேண்டுமென்று உத்தரவு போடப்பட்டிருக்கிறது.